செ.வெ.எண்.62 நாள்:24.04.2017

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக மன்ற கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 28 பயனாளிகளுக்கு ரூ.2.39 லட்சம் மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்.இ.ஆப., அவர்கள் வழங்கினார்கள்.

-----

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சி மன்ற கூட்ட அரங்கில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (24.04.2017) நடைபெற்றது. பொதுமக்கள் ஏராளமானோர் கூட்டத்தில் கலந்து கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கோரிக்கை மனுக்களை வழங்கினார்கள்.

இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் வருவாய்த்துறையின் மூலம் பாளையங்கோட்டை வட்டம் முத்தூர் கிராமத்தை சேர்ந்த 16 நபர்களுக்கு இலவச வீட்டு மனைபட்டாக்களையும், முதியோர் உதவித் தொகை மாதம் ரூ.1000 ம் வழங்குவதற்கான உத்தரவு 2 நபர்களுக்கும், நலிந்தோர் உதவித் தொகை 8 நபர்களுக்கு ரூ.1,40,000 மதிப்பிலும், மாவட்ட ஆட்சியரின் விருப்புரிமை நிதியிலிருந்து கல்வி உதவி 3 மாணவ, மாணவிகளுக்கு ரூ.98,864 மதிப்பிலும் என மொத்தம் 28 நபர்களுக்கு ரூ.2,38,864 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆப., அவர்கள் வழங்கினார்.

முன்னதாக மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொது மக்களிடமிருந்து முதியோர் உதவித் தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித் தொகை, முதிர்கன்னி உதவித் தொகை, பட்டா மாறுதல், குடிநீர், சாலை வசதிகள் உள்பட பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் பெற்று, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி, விரைவில் பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட்டார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் திரு.ஆர்.விஜயலெட்சுமி, மாவட்ட ஆத்திராவிடர் நல அலுவலர் திருமதி.எஸ்.நிர்மலா, மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.புண்ணியகோட்டி உள்பட அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.